

# சிறு நரிகள்

கனிவாழ்விற்குத்
தடையான
பாவங்கள்

R.ஸ்டான்லி

# சிறு நரிகள்

**R. ஸ்டான்லி,** B.E, M.Tech.,
*திருமறைப் போதகராய்*
*மாறிய ஒரு கட்டிடப் பொறியியலர்*

*வெளியிடுவோர்:*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
சர்ச் காலனி, வேலூர் 632 006
*தொலைபேசி: 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>   www.bymonline.org*

**LITTLE FOXES** (Tamil)

Copyright 1984 R. STANLEY
13 Church Colony,
Vellore 632 006, India
*<stanleyonbible@hotmail.com>*

First Edition : October 1984
Fifth Edition : June 2001
This Edition : January 2015

Typeset by K. Gunasekaran,
Retired Missionary, BYM

*Permission must be obtained from the author for any type of reproduction of the articles from this book.*

Writers and editors may freely reprint the outlines from this book provided they mention the source and send a copy of the published material to the author.

Printed by
Bapuji Printers, Chennai

# முன்னுரை

''நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத் திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்'' என்றும் ''நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப் படுவார், எனக்கும் சீடராயிருப்பீர்கள்'' என்றும் இயேசு கூறினார். அப்படியானால் கனி வாழ்வுக்குத் தடையாயுள்ள அத்தனையையும் அகற்றுவதும், கனி கொடுக்கத் தேவையான அத்தனையையும் செய் வதும் நமது தலையாய கடமையாகிறது. இதுவே இப்புத்தகத்தின் நோக்கமாகும்.

பூவும் பிஞ்சுமாயிருக்கிற நமது திராட்டசத் தோட்டங்களைக் கெடுக்கிற சிறு நரிகளை அடையாளங்கண்டு அவற்றைப் பிடித்து அகற்றிவிட இப்புத்தகம் பெரிதும் உதவும். கதை வாசிப்பதுபோல் இதை அப்படியே வாசித்துவிட முயல்வது எவ்வித பயனும் தராது. திறந்த வேதத்துடன் குறிப்பு வசனங்களைத் திருப்பிப்பார்த்து நிதானமாய்த் தியானியுங்கள். ஆவியானவர் உங்கள் வாழ்க்கையின் இருண்ட, பிறருக்குத் தெரியாத பகுதிகளை ஊடுருவிப் பார்க்க இடங்கொடுங்கள். உணர்த்தப்படுபவற்றை உடனுக்குடன் அறிக்கை செய்து கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுங்கள். இந்நரிகள் மறு படி உள்ளே நுழையாதிருக்க தேவ வார்த்தை போதிக்கும் தடுப்பை யும் பாதுகாவலையும் அமையுங்கள். விழித்திருங்கள், வெற்றி பெறுவீர்கள்.

இப்பாடங்களைத் தினத்தியானத்திற்கும், குழு ஆராய்ச்சிக்கும், பிரசங்கக் குறிப்புகளுக்கும் பயன்படுத்தலாம். இத்தலைப்புகள்மீது உங்களுக்குத் தெரிந்த வேறு வசனங்களையும், சத்தியங்களையும், எடுத்துக்காட்டுகளையும் கூடுதல் குறிப்புகள் என்ற காலியிடத்தில் எழுதி வைத்துக்கொண்டால் இப்புத்தகம் பல்லாண்டுகளுக்குப் பலவிதங்களில் உங்களுக்கு உதவும்.

இப்புத்தகத்தில் பெயரிடப்படாத வேறு பல சிறு நரிகளும் உண்டு!

— ஆசிரியர்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | இச்சை | ... | 9 |
| 2. | விக்கிரகாராதனை | ... | 13 |
| 3. | பொறாமை | ... | 17 |
| 4. | புறங்கூறுதல் | ... | 21 |
| 5. | கோபம் | ... | 25 |
| 6. | கசப்பு | ... | 29 |
| 7. | நியாயந்தீர்த்தல் | ... | 33 |
| 8. | துர்ப்பழக்கம் | ... | 37 |
| 9. | தன்னலம் | ... | 41 |
| 10. | உலகச் சிந்தை | ... | 45 |
| 11. | ஒத்துப்போதல் | ... | 49 |
| 12. | மாய்மாலம் | ... | 53 |
| 13. | பின்மாற்றம் | ... | 57 |
| 14. | அடங்காமை | ... | 61 |
| 15. | ஒழுங்கின்மை | ... | 65 |
| 16. | மதிகேடு | ... | 69 |
| 17. | எதிர்ப்புப் போட்டி | ... | 73 |
| 18. | சோம்பல் | ... | 77 |
| 19. | துக்கம் | ... | 81 |
| 20. | அறியாமை | ... | 85 |
| 21. | பட்சபாதம் | ... | 89 |
| 22. | தள்ளிப்போடுதல் | ... | 93 |
| 23. | தற்பரிசோதனை | ... | 97 |

# 1 இச்சை

***(அ) இச்சையின் பயங்கரம்***

1. பரிசுத்தமாகுதலில் ஓர் அடிப்படைப் பகுதி
(1 தெச 4:3-8; எபே 5:3)
2. 7ஆவது 10 ஆவது கட்டளைகள் (யாத் 20:14,17)
3. மாம்சத்தின் வெளியரங்கக் கிரியைகளில் முதல் நான்கு
(கலா 5:19)
4. ஏறக்குறைய எல்லா நிருபங்களிலும் குறிப்படப்பட்டுள்ளது
(ரோ 13:12-14; 1 கொரி 6:13-20; கலா 5:13-21;
எபே 4:17-24; கொலோ 3:1-7; 1 தெச 4:3-7;
2 தீமோ 2:21,22; 1 பேது 2:9-11; 4:1-3; 2 பேது 2:9,10)
5. பயங்கர நியாயத்தீர்ப்பு (2 பேது 2:9,10,13,14,17,18)

***(ஆ) சில வெளிப்பாடுகள்***

1. இச்சையான பார்வை (மத் 5:28; 2 பேது 2:14அ; யோபு 31:1).
2. சுய புணர்ச்சி, உடல் துர்ப்பரயோகம் (1 கொரி 6:9,15,18-20)
3. ஆண் புணர்ச்சி (1 கொரி 6:9; ரோ 1:27)
4. சரசம் (நீதி 30:18,19)
5. விவாக வாழ்வுக்கு வெளியுறவு
(யாத் 20:17; யோபு 31:9,10; நீதி 5:18-20; மல் 2:15)

***(இ) விளைவுகள்***

1. கட்டுண்ணலும், வழி பசகலும் (நீதி 5:20-23)
2. சம்பத்தெல்லாம் நிர்மூலம் (யோபு 31:12)
3. உடல் முழுவதும் கெட்டு இருளாகுதல்



(1 கொரி 6:18,19; 3:16,17; மத் 6:23)

4. கிறிஸ்தவ ஐக்கியத்தில் பாதிப்பு (1 கொரி 5:11)

***(ஈ) கற்புக்கு நல் எடுத்துக்காட்டுகள்***

1. யோசேப்பு (ஆதி 39:6-12)
2. யோபு (யோபு 31:1, 9-12)

***(உ) மேற்கொள்ளுவதெப்படி ?***

1. விலகி ஓடுங்கள்
(2 தீமோ 2:22அ; 1 கொரி 6:18அ; ஆதி 39:12)
2. பிடுங்கி எறியுங்கள், தறித்துப் போடுங்கள்! (சோதனைக்குக் காரணமான நபர்களையும் இடங்களையும்) (மத் 5:29,30)
3. சோம்பேறித்தனமாயிராதேயுங்கள்! (2 சாமு 11:1-4)
4. உங்கள் தவறுதலை நேர்மையாய் அறிக்கையிடுங்கள்!
(2 சாமு 11:13; சங் 51)
5. உங்கள் பழைய மனிதனை மரித்துப்போனதாக எண்ணி, உங்கள் அவயவங்களை நீதிக்கு ஒப்புக்கொடுங்கள்!
(ரோ 6:11-23)
6. கிறிஸ்துவிடமிருந்து அவரது பரிசுத்தத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்! (எபே 4:19-24)
7. தேவ வசனத்தால் நிறைந்திருங்கள்! (நீதி 6:23,24; சங் 119:11)
8. விழித்திருந்து ஜெபயுங்கள் (மத் 26:41)
9. சோதனையை சோதனை நிலையிலேயே நிறுத்துங்கள்! சோதனை பாவமல்ல! (யாக் 1:14,15; எப 4:15)
10. தேவனைத் துதித்து மகிமைப்படுத்தி வாழுங்கள்!(ரோ 1:21,24)

***(ஊ) மேற்கொள்ளுவதின் ஆசீர்வாதங்கள்***

1. தேவன் மகிமைப்படுகிறார் (1 பேது 2:11,12)

2. கிறிஸ்துவோடு நாம் மகிமைப்படுவோம் (கொலோ 3:4,5)

3. பரலோகத்திலும் பெரும்பாராட்டுண்டு (வெளி 14:4,5)

***கூடுதல் குறிப்புகள்:***



# 2 விக்கிரகாராதனை

### *(அ) விக்கிரகாராதனையை தேவன் அருவருக்கிறார்*

1. பத்துக் கற்பனைகளில் முதல் இரண்டும் விக்கிரகாரா தனையைக் கண்டிப்பவை.
   *''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்... யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்''* (யாத் 20:2-5)

2. விக்கிரகங்களின் பெயரை உச்சரிக்கவும் கூடாதென்று தேவன் தமது மக்களை எச்சரிக்கிறார்.

   *''அந்நிய தேவர்களின் பெயரைச் சொல்ல வேண்டாம்; அது உன் வாயிலிருந்து பறக்கக் கேட்கப்படவும் வேண்டாம்''* (யாத் 23:13)

3. புதிய ஏற்பாட்டில் கடைசியாக எழுதப்பட்டது யோவானின் நிருபம் அது இவ்விதம் முடிவடைகிறது.

   *''பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங் களைக் காத்தக்கொள்வீர்களாக. ஆமென்''* (1 யோ 5:21)

### *(ஆ) விக்கிரகாராதனை செய்யப்படுபவை*

1. சொரூபங்கள் (ஏசா 44:9-20)
2. சிலுவை போன்ற அடையாளச் சின்னங்கள் (2 இரா 18:4)
3. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் (உபா 4:19)
4. திருகங்கள், பறவைகள், முதலியன (ரோ 1:23)
5. பிசாசுகள் (வெளி 9:20; மத் 4:9,10)
6. தேவ தூதர்கள் (கொலோ 2:19; வெளி 22:8,9)
7. பரிசுத்தவான்கள் (அப் 10:25; 14:12-18)

### (இ) *விசுவாசிகள் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய விக்கிரகாராதனைகள்*

1. பொருளாசை
*''விக்கிரகாராதனையான பொருளாசை''*
கொலோ 3:5; யோபு 31:24-28)

2. நாள் பார்த்தல் (கலா 4:8-10)

3. அவிசுவாசிகளுடன் ஐக்கியம்
*''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக ... தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?''*
(2 கொரி 6:14-18; 1 கொரி 10:16-21)

***(ஈ) விக்கிரகாராதனைக்கு எதிரான எடுத்துக்காட்டுகள்***

1. எலியா துணிந்த சவால் (1 இரா 18:21,26,27)
2. தாவீது உறுதியான அறிக்கை (சங் 15:4)
3. தானியேலும் நண்பரும் தைரிய சாட்சி
(தானி 3:16-18; 6:7-10)
4. பவுல் ஆவியில் வைராக்கியம் (அப் 17:16)

***(உ) எச்சரிக்கையாயிருங்கள்!***

1. விக்கிரகாராதனை பெரும்பாலும் மாம்ச இச்சைகளோடு இணைந்தது
(ரோ 1:22-25; 1 கொரி 10:7; 1 பேது 4:3; வெளி 2:14)
2. விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்! (1 கொரி 10:14)

கூடுதல் குறிப்புகள்:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



# 3 பொறாமை

***(அ) பொறாமையின் பயங்கரம்***

1. ''கலகத்துக்கும் சகல துர்ச்செயல்களுக்கும்'' இதுதான் வேர்
(யாக் 3:16).
2. இது உக்கிரத்தையும் கோபத்தையும் விடக் கொடுமையானது
(நீதி 27:4)
3. இது தெய்வீக ஞானமல்ல, பேய்த்தனத்தின் கனி(யாக் 3:14-17)
4. இது இருளின் செயல் (ரோ 13:13; கலா 5:21)
5. இது மாம்சீகத்தின் அடையாளம் (1 கொரி 3:3)
6. இது வியாதிக்குக் காரணம் (நீதி 14:30)
7. இது ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடுக்கிறது (1 பேது 2:1,2)

***(ஆ) பொறாமைக்கு எடுத்துக்காட்டுகள்***

1. சகோதரரிடையே பொறாமை

(அ) ''ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீ கரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீ கரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண் டாகி, அவன் முகநாடி வேறுபட்டது'' (ஆதி 4:4,5)

(ஆ) ''யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, சகோதரருக்கு அறி வித்தான். அவன் சகோதரர் அவன் மேல் பொறாமைகொண் டார்கள்'' (ஆதி 37:5,11; அப் 7:9)

***2. சகோதரிகளிடையே பொறாமை***

*'''ராகேல் தான் யாக்கோபுக்குப் பள்ளைகளைப் பெறாததைக் கண்டு தன் சகோதரியின் மேல் பொறாமைகொண்டு''*
(ஆதி 30:1)

3. உலக வேலைகளில் பொறாமை

*''தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்ட வனாயிருந்தான் ... அவர்கள் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானி யேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்''*
(தானி 6:3,4)

4. ஆவிக்குரிய வட்டாரங்களில் பொறாமை

(அ) எல்தாத்தும், மேதாத்தும் தீர்க்கதரிசனம் சொல்கையில் யோசுவாவிற்கு! (எண் 11:26,29)

(ஆ) தேவன் தாவீதைச் சிறப்பாகப் பயன்படுத்தினபோது தாவீதின்மேல் சவுலுக்கு! (1 சாமு 18:6,9)

(இ) வேறொரு குழுவினன் பசாசு துரத்தியபோது யோவானுக்கு! (மாற் 9:38,39; லூக் 9:49,50)

(ஈ) திரள் கூட்டத்தை ஈர்த்த இயேசுவின்மேல் பரதான ஆசாரியர் களுக்கு! (மாற் 15:9)

(உ) தங்களுடைய வறட்டுப் பாராம்பரியங்கள் அசையக் கண்டதர்களுக்குப் பவுலின்மேல்! (அப் 13:44,45)

### *(இ) பொறாமையின் காரணங்கள்*

1. தேவன் நமக்கு நியமித்து அளித்தவைகளில் அதிருப்தி (மத் 20:11-15)
2. பயமும் பாதுகாப்பற்ற உணர்வும் (1 சாமு 18:8,9; யோவா 12:19)
3. தேவனுக்குத்தான் வெற்றியும் அவர் இராஜ்யத்துக்குத்தான் இலாபமும் இருக்கும்வரை ''யார்'' செய்கிறார் என்பது பெரிதல்ல என்பதை உணரத் தவறுவது (1 கொரி 3:5-9)
4. தேவபக்திக்கேற்ற உபதேசங்களைவிட முரண்பாட்டு உப தேசங்களில் ஆர்வம் காட்டுதல் (1 தீமோ 6:3,4)

### *(ஈ) பொறாமைக்கு நாம் இலக்காகும்போது செய்ய வேண்டியது*

1. தேவவசனத்தின் புடமிடுதலுக்கு தொடர்ந்து ஒப்புவித்தல்
எடுத்துக்காட்டு: யோசேப்பு (சங் 105:19; அப் 7:9)



2. பொறுமையும் பிதாவாகிய தேவனுக்குப் பூரணமாய் ஒப்புக் கொடுத்தலும்
எடுத்துக்காட்டு: இயேசு (மாற் 15:10; 1 பேது 2:19-23)
மோசே (எண் 16:15, 28-33)

3. வாழ்க்கையின் எல்லாப்பகுதிகளிலும் நேர்மையையும் உண்மை யையும் காத்துக்கொள்ளுதல்
எடுத்துக்காட்டு: தானியேல் (தானி 6:3,4)

### *(உ) ராஜரிகப் பிரமாணம்*

*''அன்புக்குப் பொறாமையில்லை''* (1 கொரி 13:4)

### *கூடுதல் குறிப்புகள்:*

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

# 4 புறங்கூறுதல்

### *(அ) நியாயப்பரமாணத்தில் தேவ கட்டளை*

''உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லித் திரியாயாக; நான் கர்த்தர்'' (லேவி 19:16)

### *(ஆ) புறங்கூறுதலுக்குக் காரணங்கள்*

1. அன்புத் தாழ்ச்சி (1 கொரி 13:6; கலா 5:14,15)
2. கர்த்தர் கவனிக்கிறார் (எண் 12:1,2), ஆவியானவர் துக்கப் படுத்தப்படுகிறார் (எபே 4:30,31) என்ற நினைவின்மை.

### *(இ) புறங்கூறுதலின் விளைவுகள்*

1. அது இருதயத்தைப் புண்படுத்துகிறது (நீதி 18:8)
2. அது பல சண்டைகளுக்குக் காரணம் (நீதி 25:23; 26:20)
3. அது ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாகவும் (1 பேது 2:1,2; சங் 15:1-3) சபையில் ஊழியத்துக்குப் பாதகமாகவும் இருக்கிறது (2 கொரி 12:20,21)

### *(ஈ) புறங்கூறுதலும் பற தீங்குகளும்*

1. புறங்கூறுதலும் முகத்துதியும் (நீதி 20:19)
2. புறங்கூறுதலும் மாய்மாலமும் (சங் 41:6; எரே 9:4,8)
3. புறங்கூறுதலும் பதவி ஆசையும் (3 யோ 9,10)
4. புறங்கூறுதலும் சோம்பலும் (1 தீமோ 5:13; 2 தெச 3:11)
5. புறங்கூறுதலும் பன்வாங்குதலும் (எரே 6:27-30)

### *(உ) பழைய ஏற்பாட்டுச் சம்பவம் ஒன்றிலிருந்து படிப்பினைகள்*

எண்ணாகமம் 12:1-16 வாசியுங்கள்.

மிரியாமும் ஆரோனும் மோசேயைப் புறங்கூறினர்.

1. மோசே அல்ல, கர்த்தர் அதைக் கேட்டார்! (வச 2)
2. கர்த்தருடைய கோபம் மூண்டது! (வச 9)



3. தேவ மகிமை விலகிப்போனது! (வச 10)
4. மிரியாம் குஷ்டரோகியானாள்ஆன்மீக உணர்விழப்பு (வச 10)
5. மிரியாம் விலக்கப்பட்டாள் ஐக்கிய முறிவு (வச 15)
6. மக்களின் பரயாணத் தாமதம்முன்னேற்றத்தில் தடை (வச 15)

### *(ஊ) நீங்கள் புறங்கூற விரும்பனால்...*

உங்களை நீங்களே கேட்க வேண்டியவை:

1. இது உண்மையா?
2. இது தேவையா?
3. இது கருணையா?

### *(எ) புறங்கூறுகிறவன் உங்களிடம் வந்தால்...*

அவரைக் கேட்க வேண்டியவை:

1. நீங்கள் என்னிடம் அந்தக் கதையைச் சொன்னால் அது எனக்கு நன்மை பயக்குமா?
2. அப்படிச் சொல்வதால் உங்களுக்கு நன்மையுண்டா?
3. அதனால் நீங்கள் புறங்கூறும் நபர் பயனடைவாரா?

### *(ஏ) நீங்கள் புறங்கூறப்பட்டால்...*

1. தடுக்க வேண்டாம்!
2. தாக்க வேண்டாம்!
3. ஆசீர்வதியுங்கள்!

### *(ஐ) புறங்கூறுதலுக்குக் கடுந்தண்டனை*

சங் 50:20,21; நீதி 6:12-15; ரோ 1:30-32; 2:1

### *(ஒ) சில சாதக ஆலோசனைகள்*

1. தனிமையில் சகோதரனின் தவற்றைச் சுட்டிக்காட்டுங்கள் (மத் 18:15,16)
2. குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் (யாக் 4:11; 5:9,16)

3. நன்மையானவைகளைச் சிந்தியுங்கள் (பிலி 4:8)

***(ஓ) ''பிசாசு'' என்பதின் கிரேக்கச் சொல்லாகிய ''டயபோலாஸ்'' என்பதற்குப் பொருள் ''புறங்கூறுகிறவன்'' என்பது!***

கூடுதல் குறிப்புகள்:



# 5 கோபம்

### *(அ) கோபத்தின் அகோரம்*

1. இது தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கத் தடுக்கும் யமாம்சக் கிரியையின் வெளிப்பாடு (கலா 5:19-21)
2. இது பழைய மனிதனின் செயல் பட்டியலில் முதலிடம் பெறுகிறது (கொலோ 3:8,9)
3. இது தேவ நீதியை நடப்பக்க எதிர்த்து நிற்கிறது (யாக் 1:20)
4. இது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது (எபே 4:30,31)
5. இது சபக்கப்பட்டது (ஆதி 49:6,7)
6. A-N-G-E-R என்ற சொல் D-A-N-G-E-R என்ற சொல்லில் ஒரு எழுத்துதான் குறைவானது!

### *(ஆ) கோபத்தின் காரணங்கள்*

1. இருதயத்தில் மதியீனம்

   *''உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்''* (பிர 7:9; நீதி 14:17)

2. பெருமையும், கவுரவப் பிரச்னையும்

   எடுத்துக்காட்டுகள்: நாகமான் (2 இரா 5:11,12)
   யோனா (யோனா 4:1-4)

3. பொறாமை

   எடுத்துக்காட்டுகள்: காயீன் ஆபேல் மீது (ஆதி 4:5,6)
   சவுல் தாவீதின் மீது (1 சாமு 18:8,9)
   பத்து சீடர் மற்ற இருவர் மீது (மத் 20:20-24)

4. விவேகக் குறைவு

   *''மனிதனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை''* (நீதி 19:11)

5. மற்றவரை மன்னிக்கும் தேவ அன்பை விளங்காதிருப்பது
எடுத்துக்காட்டு: மூத்த சகோதரன் (லூக் 15:27,28)

***(இ) கோபத்துக்கான தண்டனைக்கு எடுத்துக்காட்டுகள்***

1. மோசே
கானானின் நுழைவு மறுக்கப்பட்டது (எண் 20:10-12)

2. உசியா ராஜா
குஷ்டம் படித்தது (2 நாளா 2:17-20)

***(ஈ) நீங்கள் கோபப்பட்டால்...***

1. அதை வெகுநேரம் வைத்திராதேயுங்கள்!
*''நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியட்டும்''* (எபே 4:26)

2. தேவனுடைய நீதியான கோபங்கூட மிகவும் தற்காலிகமென்பதை நினையுங்கள்!
*''அவருடைய கோபம் ஒரு நிமிடம்''* (சங் 30:5)
*''நான் என்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை''* (ஏசா 57:16)

3. முகாந்தரம் இல்லாத கோபமானால் உடனடியாக சம்பந்தப் பட்டவரோடு காரியத்தைச் சரிசெய்யுங்கள்! (மத் 5:21-24)

***(உ) ஒரு பொற் கட்டளை***

*''கேட்கிறதற்குத் தீவிரமாயும்,*
*பேசுகிறதற்குப் பொறுமையாயும்,*
*கோபக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவீர்கள்!''* (யாக் 1:19)

***கூடுதல் குறிப்புகள்:***

______________________________________________
______________________________________________
______________________________________________
______________________________________________



# 6 கசப்பு

***(அ) தேவப் பிரமாணம்***

''உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக'' (லேவி 19:17)

***(ஆ) கசப்பின் பிறப்படம்***

நரகம்! (யாக் 3:14,15)

***(இ) கசப்பின் விளைவுகள்***

1. அது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது (எபே 4:30,31)
2. அது நித்திய ஜீவனின் ஆசீர்வாதத்தை நாம் இன்று அனுபவிக்க முடியாமற் செய்துவிடுகிறது (1 யோ 3:15)
3. அது நாம் தேவனை நேசிக்க முடியாமற் செய்துவிடுகிறது (1 யோ 4:20)
4. அது நாம் ஒளியிலே நடக்கிறோமென்று சொல்லிக்கொண்டாலும் நம்மை இருளுக்குள் தள்ளுகிறது ( 1 யோ 2:9)
5. அது கிறிஸ்துவின் சரீரத்தின் பற அங்கங்களையும் தீட்டுப்படுத்து கிறது (எபி 12:14,15)

***(ஈ) கசப்பக்குத் தண்டனைஎடுத்துக்காட்டுகள்:***

1. ஒருவரைக் காட்டிலும் இன்னொருவரின் முயற்சிகளைத் தேவன் ஆசீர்வதிக்கும்போது சகோதரருக்குள்ளே கசப்பு:
காயீன்ஆபேல் (ஆதி 4:5-7)

2. ஒருவரை அல்லது ஒரு சிலரை தேவன் சிறப்பான கிருபையோடு தெரிந்தடெுக்கும்போது சகோதரருக்குள்ளே கசப்பு:
யோசேப்பன் சகோதரர்யோசேப்பு (ஆதி 37:4; 42:21,22)

3. தன்னைவிட அதிகமாக மக்களால் விரும்பப்பட்டுப் பாராட்டப் படும் உடன் ஊழியர் மீது கசப்பு:
சவுல்தாவீது (1 சாமு 18:8-10)

4. தனக்குப் பரியமாக அல்லாது சத்தியத்தையே பேசும் தேவ ஊழியன் மீது கசப்பு:

ஆகாப் — மிகாயா (1 இரா 22:7,8,34-38)

5. தேவமக்கள் மீது கசப்பு

ஆமான் — யூதர் (எஸ்தர் 5:9; 7:9,10)

***(உ) கசப்பானது பெருந்தீங்கு விளைவிக்கும் இரு பகுதிகள்***

1. குடும்ப வாழ்வு

*''கணவர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள்''* (கொலோ 3:19)

2. சபை வாழ்வு

*''சகலவித கசப்பும் ... உங்களைவிட்டு நீங்கக்கடவது... ஒருவருக் கொருவர் மனவுருக்கமாய் இருங்கள்''* (எபே 4:31,32)

***(ஊ) கசப்பை மேற்கொள்வதெப்படி?***

1. உங்களுடைய பாவ நாற்றத்தை தேவன் சகிக்க முடியாவிட்டாலும் தாம் கிறிஸ்துவுக்குள் உங்களை எவ்விதம் நேசித்தார் என்பதைத் தியானியுங்கள் (ஆப 1:13; எபே 4:31,32)
2. நீங்கள் கசப்பாயிருக்கும் நபரை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபக்கத் துவங்குங்கள் (மத் 5:44)
3. அதி சீக்கிரமாய் ஒப்புரவாகுங்கள்ரியன் அஸ்தமிக்குமுன்! (மத் 5:23-25; எபே 4:26)

***(எ) கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பன்பற்றுங்கள்:***

(லூக் 22:51; 23:33,34)

***கூடுதல் குறிப்புகள்:***

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



# 7 நியாயந்தீர்த்தல்

***(அ) பிறரை நியாந்தீர்த்தலின் தீமை***

1. பிறரை நியாயந்தீர்ப்பவர் பொதுவாக மாய்மாலக்காரராயிருப்பர்; அவர்கள் கண்களிலேயே உத்திரம் இருக்கும்! (மத் 7:3-5)
2. நமது சகோதரனை நியாயந்தீர்க்கும்போது, உண்மையில் நாம் நியாயப்பரமாணத்துக்கு விரோதமாகப் பேசி அதையே குற்றப் படுத்துகிறோம்! (யாக் 4:11)
3. நாம் பிறர்மீது இரக்கமாயிராவிடில் இரக்கமற்ற நியாயத்தீர்ப்பே நமக்குக் கிடைக்கும்; நாம் முற்றிலும் சங்கரிக்கப்படுவோம்! (மத் 7:1,2; யாக் 2:13; ஏசா 29:20,21)

***(ஆ) நாம் ஏன் பிறரை நியாயந்தீர்க்கக்கூடாது***

1. கேட்பதையும் காணுவதையுமே சார்ந்து நாம் நியாயந்தீர்ப்போம்; ஆனால் இருதயத்தை அறிபவர் தேவனே.

   *''அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும் தனது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் இருப்பார்''* (ஏசா 11:3)

   *''நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள்''* (யோ 8:15; 7:24)
2. இயற்கையாக நாம் பிறரை நியாயந்தீர்க்கப் பொறுமையா யிருப்பதில்லை (யோ 7:51)
3. நியாயத்தீர்ப்புக்கான காலம் இன்னும் வரவில்லை.

   *''கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்''* (1 கொரி 4:5)
4. பிறரை நியாயந்தீர்க்கும்போது நாம் நம்மை நாமே குற்றவாளி யாகத் தீர்த்துவிடுகிறோம்! (ரோ 2:1)
5. தமது மக்களை நியாயந்தீர்ப்பது கர்த்தர்தாமே!

   (உபா 32:36; சங் 50:4-6; 135:14; எபி 10:30)

### *(இ) பிறரை நியாயந்தீர்ப்பவர்களுக்கு தேவன் விடும் சவால்*

1. *''மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை''* (ரோ 2:1)
2. *''மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?''* (யாக் 4:12)

### *(ஈ) சாதக ஆலோசனைகள்*

1. மன்னியுங்கள்! (லூக் 6:37)
2. பிறருடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமல் விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்! (ரோ 14:1-4)
3. விழுந்தவனைச் சாந்தத்தோடு தூக்கியெடுங்கள்! (கலா 6:1)
4. சிறு கொள்கை வேறுபாடுகளில் பிறரை நியாயந்தீர்ப்பதைத் தவிர்த்திடுங்கள்! (கொலோ 2:16; யோ 7:22-24)
5. தேவனது இரக்கத்தையும் அன்பையும் பின்பற்றுங்கள்! (லூக் 6:36,37; 1 பேது 4:8)
6. உங்களையே நியாயந்தீர்த்துக்கொள்ளுங்கள்! (1 கொரி 11:31)

### *(உ) ஓர் இறுதி வார்த்தை*

*''நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம். இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக!''* (ரோ 14:10,13)

கூடுதல் குறிப்புகள்:

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________



# 8 அடிமைத்தனம்

### *(அ) வேதம் கண்டிக்கும் அடிமைத்தனங்கள்*

1. உணவு (தேவையான உண்ணல் அல்ல)

   *''மாம்சப் பெருந்தீனிக்காரரைச் சேராதே''* (நீதி 23:20,21)

   *''நீ போஜனப் பரியனாயிருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை''* (நீதி 23:1-3)

   *''எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. வயிற்றுக்குப் போசனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப் பண்ணுவார்''* (1 கொரி 6:12,13)

2. வசதிகள்

   *''நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்பயமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்''* (பிலி 4:11,12)

3. சம்பூரணமும், அனுபவிப்பும்

   *''கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்'' ''தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ?''* (யோபு 1:21; 2:10)

   *''இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள்போலவும் இருக்கவேண்டும் ... காலம் குறுகினது''* (1 கொரி 7:31,29)

4. தூக்கம்

   *''தூக்கத்தை விரும்பாதே, விரும்பனால் தரித்திரனாவாய்... இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும் ... என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்னைப் போல வரும்''* (நீதி 20:23; 24:33,34)

5. மதுபானம், போதை மருந்துகள்

   *''யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்தில் தங்கித் தரிப்பதவர்களுக்கே''* (நீதி 23:29,30)

*''மதுபானப் பரியனாயிராமல்''* (1 தீமோ 3:3,8)

6. பொழுது போக்குகள் (இசை, டிவி, கதைப் புத்தகங்கள் முதலியன)

*''என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடைபண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் விலக்கவில்லை ... எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது''* (பிர 2:10,11)

### *(ஆ) அடிமைத்தனத்திலிருந்து வெற்றி பெறுவது எங்ஙனம்?*

1. துவக்கங்களில் மிகக் கவனமாயிருக்க வேண்டும்.

போதை மருந்துகளைப் பொறுத்தவரை எப்படியிருக்குமென தொட்டும் பார்க்கக்கூடாது.

*''மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும், முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்''* (நீதி 23:31,32)

2. அகப்பட்டுக்கொண்டால் விடுதலைக்காய் கர்த்தரையே நோக்கிக் கூப்பிடுங்கள்.

*''தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் ... கர்த்தர் சமீபமாயிருக் கிறார். அவர்களை இரட்சிக்கிறார்''* (சங் 145:18,19)

*''குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை யாவீர்கள்''* (யோ 8:36)

3. உங்கள் ஒத்துழைப்பின்றி (விருப்பம், தீர்மானம்) கர்த்தர் உங்களுக்கு உதவமுடியாது.

*என்னைப் பெலப்படுத்துகிற ''கிறிஸ்துவினாலே'' எல்லாவற்றையும் செய்ய ''எனக்குப்'' பெலனுண்டு* (பிலி 4:13)

*'''நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார், அவரை விட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டுவிடுவார்''*

(2 நாளா 15:2)



### *(இ) அடிமைத்தனத்திற்கு மாற்றுமருந்து*

*உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் ''முழு'' இருதயத்தோடும் '''முழு'' ஆத்துமாவோடும், உன் ''முழு'' மனதோடும், உன் ''முழு'' பலத்தோடும் அன்புகூருவாயாக!* (மாற் 12:30)

### *கூடுதல் குறிப்புகள்:*

# 9 தன்னலம்

### (அ) கடைசிக்கால அடையாளப் பட்டியலில் முதல் வருவது

*''கடைசி நாட்களிலே கொடிய காலங்கள் வரும்... எப்படியெனில் மனிதர்கள் தற்பிரியராய் ... இருப்பார்கள்''*
(2 தீமோ 3:1-5)

### (ஆ) தன்னலத்தின் விளைவுகள்

1. கனியின்மை, வாழ்விழப்பு

   *''தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்''*
   (யோ 12:24,25)
2. தேவ அன்பை மறுதலித்தல் (1 யோ 3:16,17)
3. மக்களின் சாபம்

   *''தானியத்தைக் கட்டிவைக்கிறவனை மக்கள் சபிப்பார்கள்''*
   (நீதி 11:26)
4. நித்திய அக்கினி

   *''சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு ... நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்கு ஆகாரம் கொடுக்கவில்லை''* (மத் 25:41-46)

### (இ) தன்னலம் காணப்படக்கூடிய பகுதிகள்

1. உலகப் பொருளில் (1 யோ 3:17)
2. வளர்ந்த விசுவாசிகளுக்கும் புது விசுவாசிகளுக்குமுள்ள உறவில் (எசேக் 34:18-22; ரோ 15:1)
3. தேவ மந்தையை மேய்ப்பதில் (ஏசா 56:11)
4. ஆவியின் வரங்களை வெளிப்படுத்துதலில் (1 கொரி 14:12-19)
5. ஆன்மீக விருப்பங்களில் (மாற் 10:35-37)
6. உபவாசம் போன்ற மார்க்க முயற்சிகளில் (சக 7:4-6)



### (ஈ) தன்னலமின்மையின் முக்கியத்துவம்

1. முதலாவதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் பிரதான கட்டளையும், நியாயப்பிரமாண முழுமையின் அடக்கமும்.

   *''உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக''* (மத் 22:39; ரோ 13:9; கலா 5:14; யாக் 2:8)
2. சீடத்துவத்தின் அடிப்படை நிபந்தனை

   *''... அவன் தன்னைத்தான் வெறுத்து ...''* (லூக் 9:23)
3. சகோதர சமாதான உறவுக்கு அத்தியாவசியம் (ஆதி 13:8,9)

### (உ) தன்னலமின்மைக்கு எடுத்துக்காட்டுகள்

1. மோசே (யாத் 32:32)
2. சாமுவேல், யோபு (1 சாமு 12:23; யோபு 42:10)
3. நல் மேய்ப்பர் இயேசு (யோ 10:11; 2 கொரி 8:9)
4. ஆதிச்சபையினர் (அப் 4:32)
5. பவுல் அப்போஸ்தலன் (1 கொரி 10:32,33; 2 கொரி 12:15; ரோ 9:3)
6. தீமோத்தேயு (பிலி 2:19-22)
7. பிரிஸ்கில்லாள், ஆக்கில்லாள் (ரோ 16:3,4)

### (ஊ) தன்னலமின்மையே கிறிஸ்துவின் சிந்தை

*''அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது''* (பிலி 2:4,5)

**கூடுதல் குறிப்புகள்:**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

# 10 உலகச் சிந்தை

*(அ) சுத்த பக்தி*

*''உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளு கிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பு மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது''* (யாக் 1:27)

*(ஆ) உலகச் சிந்தையின் கேடு*

1. அது ஆன்மீக விபசாரம் (யாக் 4:4)
2. அது தேவனுக்கு விரோதமான பகை (யாக் 4:4)
3. அது மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, வாழ்வின் பெருமையாக வெளிப்படுகிறது (1 யோ 2:16)
4. அது தரித்திரத்துக்கு வழிநடத்துகிறது (நீதி 21:17)
5. அது மாயை (பிர 2:3-11)
6. அது பொல்லாங்கு (1 யோ 5:19)
7. அது நமது இருதயத்தில் தேவனுடைய வசனத்தை நெருக்கிப் போட்டு நம்மைக் கனியற்றவர்களாக்குகிறது (லூக் 8:14)
8. அது சீடத்துவத்துக்குப் பெருந்தடை (மத் 6:24,25; லூக் 14:26,27)
9. அது கடைசி நாளில் தண்டிக்கப்படும் (யாக் 5:1-3,5)
10. அது மரணம் (1 தீமோ 5:6)

*(இ) உலகச் சிந்தையின்மைக்கு எடுத்துக்காட்டுகள்*

1. இயேசு கிறிஸ்து (யோ 14:30; 17:16)
2. மோசே (எபி 11:21)
3. விசுவாச வீரர்கள் (எப 11:32,38)
4. அப்போஸ்தலன் பவுல் (கலா 6:14)



*(ஈ) உலகச் சிந்தையை எதிர்ப்பவை*

1. தேவ அன்பு (1 யோ 2:15)
2. கிறிஸ்துவின் சிலுவை (பலி 3:18,19)
3. பரிசுத்த ஆவியானவர் (யாக் 4:4,5; யோ 14:17)
4. தேவ வசனம் (யோ 17:14)

(உ) உலகச் சிந்தையை மேற்கொள்ளுவதெப்படி

1. மனம் புதிதாகி மறுரூபமாகுங்கள் (ரோ 12:2)
2. காலம் குறுகினது; உலகம் கடந்துபோகிறது இதை நினைவில் வையுங்கள் (1 கொரி 7:29-31)
3. மேலுள்ளவைகளில் உங்கள் பரியத்தைப் பதியுங்கள் (கொலோ 3:1-3)
4. உங்கள் பரலோகக் குடியுரிமையை எப்பொழுதும் நினைத்துக் கொள்ளுங்கள் (பிலி 3:19,20)
5. துதியினாலும், தேவனை ஆராதிக்கும் ஆவியினாலும் எப் பொழுதும் நிறைந்திருங்கள் (மத் 4:8-11)
6. கிறிஸ்துவின் வருகை, புதிய வானம், புதிய பூமி ஆகியவை களை எதிர்நோக்கியிருங்கள் (பலி 3:19,20; 2 பேது 3:13)

***(ஊ) செலுத்தவேண்டிய அதிகக் கிரயம்***

*''உலகம் உங்களைப் பகைக்கும்''* (யோ 15:19)

***இப்பொருள்பற்றிய நல்ல நூல்கள்***

1. ''Love not the world'' வாட்ச்மன் நீ
2. ''உண்மையான சீடத்துவம்'' வில்லியம் மக்டனால்டு

கூடுதல் குறிப்புகள்:

___

___

___

___

# 11 ஒத்துப்போதல்

***(அ) எவைகளோடு ஒத்துப்போகக்கூடாது?***

1. பாவத்தோடு

   *''பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தம் சிந்தப்படத்தக்கதாக ... எதிர்த்து நிற்க''* (எபி 12:4)

2. உலக முறைகளோடு

   ''இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல்'' (ரோ 12:2)

3. நற்செய்தியறிவிப்புப் பணிக்கடுத்ததில்

   ''நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே'' (அப் 4:17-20)

***(ஆ) நல்ல எடுத்துக்காட்டுகள்***

1. தேவாராதனை

   மோசேபார்வோன் (யாத் 5:3; 7:16; 8:25-28; 10:11,24-27)

   எபிரெயர் 11:24ஐயும் வாசியுங்கள்

2. கற்பு

   யோசேப்புபோத்திபாரின் மனைவி (ஆதி 39:11-13)

3. தேவப் பணி

   நெகேமியாஅவனை எதிர்த்தவர்கள் (நெகே 6:1-4)

4. பரிசுத்தம்

   தானியேலும் தோழரும்நேபுகாத்நேச்சார் (தானி 1:3-8)

5. விசுவாசமும் தேவபக்தியும்

   அனனியா, மிசாவேல், அசரியாநேபுகாத்நேச்சார் (தானி 3:16-18)

6. விசுவாசமும் தேவபக்தியும்

   பழைய ஏற்பாட்டுப் பெண்கள் (எபி 11:35)



7. இயேசு கிறிஸ்து

   (1) பிசாசிடம் (மத் 4:8-10)

   (2) பிலாத்துவிடம் (யோ 19:10,11)

(8) உபதேசம்

   பவுல் — அகிரிப்பா இராஜா (அப் 26:20-29)

   — கள்ளச் சகோதரர் (கலா 2:4,5)

9. சத்தியம்

   அப்போஸ்தலர் (2 கொரி 13:6-8)

***(இ) ஒத்துப்போவது ஏன்?***

1. பெரும்பான்மையினரைப் பன்பற்ற விருப்பம்

   *''தீமைசெய்ய திரளானபேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக''* (யாத் 23:2)

2. மனித பயம்

   எடுத்துக்காட்டு: பேதுரு (கலா 2:11-13)

3. விசுவாசமில்லாதவர்களைப் பன்பற்றுதல் (ரோ 3:3,4)

4. உலக சிநேகம் (யாக் 4:4; 1 யோ 2:15)

***(ஈ) நல்லதொரு முழக்கம்***

*''நான் இறங்கி வரக்கூடாது''* (நெகே 6:3)

***கூடுதல் குறிப்புகள்:***

______________________________

# 12 மாய்மாலம்

### *(அ) மாய்மாலத்தின் வரையறை*

1. சிந்தைக்கும் சொல்லுக்கும் முரண்பாடு

   *''மாயக்காரரே! உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து உதடுகளினால் என்னைக் கனம்பண்ணு கிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது''* (மத் 15:7,8)

2. சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு

   *''நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் (வேதபாரகரும் பரிசேயருமாகிய மாயக்காரர்) உங்களுக்கு சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்''* (மத் 23:2,3)

### *(ஆ) மாய்மாலத்தின் காரணிகள்*

1. சுயநீதியும், குற்றங்காணலும் (மத் 7:4,5; லூக் 6:42)
2. பிறர் பாராட்டுப் பிரியம் (மத் 23:27,28)
3. பொருளாசை (எசே 31:31; மத் 6:24)
4. அடிப்படைகளை விட்டு சிறிய காரியங்களை வற்புறுத்துதல் (மத் 23:23,24)
5. உள்ளான வாழ்க்கையைவிட புறம்பானவைகளுக்கு முக்கியத் துவம் அளித்தல் (மத் 23:25,26)

### *(இ) மாய்மாலம் காணப்படும் பகுதிகள்*

1. ஆவிக்குரிய ஆராதனையில் (மத் 15:7-9)
2. சமூக உறவில் (எரே 9:8)
3. ஆத்மீக முயற்சிகளில் தர்மம், ஜெபம், உபவாசம் (மத் 6:2,5,16; சக 7:5,6)
4. அறிக்கையிலும், பிரசங்கத்திலும் (தீத் 1:16; ரோ 2:21-23; சங் 50:16; மீகா 3:11)



5. தேவ வார்த்தைகளைக் கேட்பதில் (எசே 33:31,32)

### *(ஈ) மாய்மாலத்தின் கனிகள்*

1. அழியும் நம்பக்கை (யோபு 8:13-15)
2. தற்காலிக மகிழ்ச்சி (யோபு 20:4-9)
3. ஆன்மீக வளர்ச்சியில் தடை (1 பேது 2:1,2)
4. தேவனுடைய ''ஐயோ'' (மத் 23:13,14,15,23,25,27,29)
5. மரணமும் நரகமும் (அப் 5:1-11; யோபு 36:13,14; மத் 23:29,33; 24:51)

### *(உ) மாய்மாலத்தை மேற்கொள்ளுவதெப்படி?*

1. தேவன் அறிவார் என்பதை உணருங்கள் (சங் 139)
2. தேவனுக்குப் பயந்திருங்கள் (2 கொரி 5:10-12)
3. உன்னதத்திலிருந்து வரும் பரிசுத்தத்தை நாடுங்கள் (யாக் 3:17)

### *கூடுதல் குறிப்புகள்:*

# 13 பின்மாற்றம்

### *(அ) பின்மாற்றத்துக்குக் காரணங்கள்*

1. பஞ்சு மெத்தை வாழ்வை எதிர்பார்த்த மேலெழுந்த மனமாற்றம் (மத் 13:20,21)
2. விழித்திருந்து ஜெபிக்கத் தவறுதல் (மத் 26:40,41,69-73)
3. ஆவியாலும், வசனத்தாலும் நிறைந்திருக்கத் தவறுதல் (லூக் 11:24-26; எபே 5:18; கொலோ 3:16)
4. கெட்ட தோழமை (எண் 11:4,5; லூக் 22:54-57; 1 கொரி 15:34)
5. திருமணத்தில் அவிசுவாசியுடன் இணைப்பு (1 இரா 11:1-4; 2 கொரி 6:14)
6. தேவப் பிள்ளைகளின் ஐக்கியத்தை அசட்டை செய்தல் (எபி 3:13; பிர 4:9-12)
7. ஆவிக்குரிய தலைமையின்மை (யாத் 32:1)
8. உலகப்பொருள் மீது பற்று (2 தீமோத 4:10; 6:10; உபா 8:10-14; எரே 49:4)
9. சோதனைகளுக்குத் தேவனைக் குற்றம் சாட்டுதல் (யாக் 1:13-16)
10. தன்னம்பக்கை, சுயசார்பு (மத் 26:31-35, 69-73; நீதி 14:14)
11. கிருபையில்லாது கிரியையில் சாருதல் (கலா 3:3-6; 5:4-7)
12. ஆவிக்குரிய உயர்வு குறித்த மனமேட்டிமை (நீதி 16:18; 1 கொரி 10:12)
13. முதிர்ச்சியில்லாது தலைமை நாட்டம் (1 தீமோ 3:6)
14. இயேசுவின் போதனைகளை அணைத்துக்கொள்ளாமை (யோ 6:60, 66-69)
15. துர்வுபதேசங்கள் (கலா 1:6-9; 1 தீமோ 4:1; 2 பேது 3:15-17)
16. நல்மனச்சாட்சியைக் காத்துக்கொள்ள முயற்சியாமை (1 தீமோ 1:19; அப் 24:16)
17. உள்ளத் தியானமற்ற விறுவிறுப்பான ஊழியம்(வெளி 2:1-4)
18. பிசாசைக் குறித்து அளவுக்குமீறிய எண்ணம் (யோ 10:28,29; 1 யோ 4:4)
19. ஆண்டவரைப் பார்ப்பதைவிட்டு பிரச்னைகளைப் பார்ப்பது (மத் 14:28-30; எப 12:2)
20. தேவனைத் துதித்து அவருடைய ஆலோசனைக்குக் காத்திருக்கத் தவறுதல் (கங் 106:13,14)
21. தேவ வாக்குத்தத்தங்கள் நிறைவேறப்படக் காத்திருக்கப் பொறுமையின்மை (எபி 10:35-39)
22. பூரணத்தைக் குறிநோக்காமை (எபி 6:1-6)

### *(ஆ) பின்மாற்றத்தின் பயங்கரம்*

1. தேவ கோபம் (எபி 10:38; யூதா 6)
2. கிறிஸ்துவுக்கும் அவர் இரத்தத்துக்கும் அவமரியாதை (எபி 6:6; 10:29)
3. பிறப்புரிமையையே துச்சமாய் எண்ணித் தூர எறிதல்(எபி 12:16)

### *(இ) பின்மாற்றத்திலிருந்து குணமாகுதல்*

1. பின்வாங்கியவர் தன்னைத் தாழ்த்தி உண்மையாய் மனந்திரும்ப வேண்டும் (2 நாளா 7:14; 12:12; லூக் 15:17-19,21; எசேக் 18:31,32)
2. பின்வாங்கியவர்களை ஆத்துமாதாயகர்கள் சாந்தத்துடனும் உள்ளான ஆத்தும வியாகுலத்துடனும் திருப்பக்கொண்டுவர முயலவேண்டும் (கலா 6:1,2; யாக் 5:19,20; புல 2:11)
3. பின்மாற்றத்துக்குள்ளான தமது பிள்ளைகளைத் திருப்ப இழுக்க தேவன் சிட்சையைப் பயன்படுத்துகிறார் (எபி 12:5-13; ஓசி 14:4)

### *(ஈ) பின்மாறாது இருக்கச் சாதக வழி*

*கிறிஸ்துவில் வெளிப்பட்ட தேவ அன்பை எப்பொழுதும் ருசித்துக் கொண்டிருங்கள்!* (ரோ 8:35-39)

### *(உ) வாக்குத்தத்தம்*

*''வழுவாதபடி உங்களைக் காக்க அவர் வல்லவர்''* (யூதா 24,25)

**கூடுதல் குறிப்புகள்:**

# 14 அடங்காமை

### (அ) தேவன் அடங்காமையை வெறுக்கிறார்

*''இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது''* (1 சாமு 15:23)

### (ஆ) அடங்காமைக்கு எடுத்துக்காட்டுகளும், தண்டனையும்

1. தேவனுக்கு விரோதமாக லூசிபர் (ஏசா 14:13-15)
2. உருவாக்கினவருக்கு விரோதமாக மனிதன் (ஏசா 45:9)
3. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக இஸ்ரவேலர் (ஏசா 63:10)
4. மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கோராகு, தாத்தான், அபராம் (எண் 16)
5. தாவீதரசனுக்கு விரோதமாக அப்சலோம் (2 சாமு 15:1-13; 18:6-9)
6. அப்போஸ்தலருக்கு விரோதமாகத் தியோத்திரேப்பு (3 யோ 9,10)
7. பெற்றோருக்கும் விரோதமாகப் பிள்ளை (உபா 21:18-21)

### (இ) அடங்கியிருக்க அழைப்பும், எடுத்துக்காட்டுகளும்

1. தேவனுக்கு (யாக் 4:7;1 பேது 5:6)
   எடுத்துக்காட்டு: பிதாவுக்கு கிறிஸ்து (பிலி 2:6-8)
   கிறிஸ்துவுக்குத் தூதர்கள் (1 பேது 3:22)
2. சபையில் மூப்பர்களுக்கு (எபி 13:17; 1 பேது 5:5; 1 கொரி 16:16)
   எடுத்துக்காட்டு: பவுலுக்கு தீமோத்தேயு (1 தீமோ 1:2அ; 2 தீமோ 1:1-4)
3. அதிகாரங்களுக்கு (ரோ 13:1-7; தீத்து 3:1; 1 பேது 2:13-18)
   எடுத்துக்காட்டு: தரியு ராஜாவுக்குத் தானியேல் (தானி 6:22)
4. மனைவியர் கணவருக்கு (எபே 5:22; 1 பேது 3:1)
   எடுத்துக்காட்டு: ஆபிரகாமுக்கு சாராள் (1 பேது 3:5,6)



5. பிள்ளைகள் பெற்றோருக்கு (எபே 6:1-3; எபி 12:9)
   எடுத்துக்காட்டு: மரியாளுக்கும் யோசேப்புக்கும் பிள்ளை இயேசு (லூக் 2:51)
6. ஒருவருக்கு ஒருவர்
   எடுத்துக்காட்டு: பவுலும் பலேமோனும் (பிலே 1,2,8,9,20,21)

### (ஈ) அடங்காமைக்குப் பரிகாரம்

1. தேவனுக்கு
   கடந்த காலத்தில் கர்த்தர் உங்கள்மீது காட்டிய இரக்கத்தை நினையுங்கள் (ஏசா 63:9,10)
   சகலமும் உங்கள் நன்மைக்கேதுவாகவே நடக்கிதென்று உணருங்கள் (ரோ 8:28)
2. அதிகாரங்களுக்கு
   தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை என்று அறியுங்கள் (ரோ 13:1)
3. ஒருவருக்கொருவர்
   நாமனைவரும் ஒரே உடலின் அவயவங்கள் என்றும், ஒரு அவயவம் பிற அவயவங்களுக்குப் பணிவதால் எதையுமே இழப்பதில்லை என்பதையும் உணருங்கள் (1 கொரி 12:21,25,27)

### (உ) அடங்கியிருத்தலின் ஆசீர்வாதங்கள்

1. தேவன் உங்களை உயர்த்துவார்! (1 பேது 5:6; யாக் 4:10; பலி 2:8-11)
2. சுகமடைவீர்கள், ஜெபத்திற்குப் பதில் பெறுவீர்கள்! (யாக் 5:16)
3. தேவனுக்கு எவ்வளவு அடங்குகிறீர்களோ அதே அளவு சாத்தானை நீங்கள் அதட்டி அடக்கமுடியும்! (யாக் 4:7)

### (ஊ) ஓர் ஆசீர்வாத வாக்குத்தத்தம்

*''நான் நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில் வாசம் பண்ணுகிறேன்''* (ஏசா 57:15)

### கூடுதல் குறிப்புகள்:

# 15 ஒழுங்கின்மை

(சிரமமின்மை, கட்டுப்பாடின்மை, குழப்பம், முதலியன)

## *(அ) தேவனது குணாதிசயம்*

*''தேவன் குழப்பத்திற்கு தேவனாயிராமல் ஒழுங்கிற்கு தேவனா யிருக்கிறார்''* (1 கொரி 14:33)

## *(ஆ) தேவனது சட்டம்*

*''சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது''* (1 கொரி 14:40)

## *(இ) ஒழுங்கும் கிரமமும் தேவையான பகுதிகள்*

1. ஜெபம்

 (i) தாவீது

 *''கர்த்தாவே, காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகிக் காத்திருப்பேன்''* (சங் 5:3)

 (ii) தானியேல்

 *''தானியேல் தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்''* (தானி 6:10)

 (iii) பேதுருவும் யோவானும்

 *''ஜெப வேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்''* (அப் 3:1)

2. ஆராய்ச்சி

 *''வாசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு''* (1 தீமோ 4:13)

3. கொடுத்தல்

 *''உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்''* (1 கொரி 16:2)

4. இல்லம்

 எடுத்துக்காட்டு: பெண்ணின் கடமை (நீதி 31:10-31)



 (i) *''இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள்''* (வச 15)

 (ii) விவேகமாக வேலை

 *''தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப் படிக்கும்''* (வச 19)

 (iii) கண்ணிய உடை

 *''அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது''* (வச 25)

 (iv) விழிப்பு, சோம்பலின்மை

 *''அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்டோட்டமாயிருக்கிறாள்''* (வச 27)

5. தொழில் / வேலை

 *''தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல் ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்''* (நீதி 22:29)

## *(ஈ) நேரம் தவறாமை ஒழுங்கின் ஒரு வெளிப்பாடாகும்!*

## *(உ) ஒழுங்கின்மையைக் குறித்துக் கண்டிப்பு!*

*''சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடக்காமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் ... நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடக்கவில்லை''* (2 தெச 3:6,7)

***கூடுதல் குறிப்புகள்:***

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

# 16 மதிகேடு

### *(அ) அதி மோசமான மதிகேடு*

தேவன் இருக்கிறார் என்பதைச் சிந்தை, சொல் அல்லது செயலில் மறுதலித்தல் அல்லது சந்தேகித்தல் (சங் 14:1-3; 58:1-3)

### *(ஆ) பொதுவாழ்வில் மூடனின் நடத்தை*

1. அவன் ஆலோசனைகளுக்குச் செவிகொடான், தான் எப்பொழுதும் சரி என்று எண்ணுகிறான்! (நீதி 12:15)
2. அவன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான் (நீதி 29:11)
3. அவன் அதிகமாய்ப் பேசுகிறான்! (பிர 10:14; நீதி 10:19; 17:28)
4. அவன் பெருமையடித்துக்கொள்வதில் மன்னன்! (நீதி 30:32)
5. அவனுக்குப் புறங்கூறலில் அலாதிப் பிரியம்! (நீதி 10:18)

### *(இ) ஆவிக்குரிய வாழ்வில் மூடத்தனம் / புத்தியீனம்*

1. பாவத்தை மறைத்தல் (சங் 38:4,5; 69:5)
2. பாவத்தைக் குறித்துப் பரியாசம் செய்தல் (நீதி 14:9)
3. தேவ சமூகத்தில் அதிகப் பேச்சு, குறைவான கவனிப்பு (பிர 5:1-3)
4. தேவனை நம்பச் சார்வதைவிட தன் இருதயத்தையே நம்புதல் (நீதி 28:25,26)
5. விசுவாசம், கிருபைக்குப் பதிலாக கிரியைகள், சட்ட திட்டங்கள் மூலம் தேவனைப் பரியப்படுத்த முயற்சித்தல் (கலா 3:1-3)
6. துன்ப காலத்தில் தேவனைக் குற்றஞ்சாட்டுதல் (யோபு 1:22; 2:10)
7. உலக ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டுதல் (1 கொரி 3:18-21)
8. தேவ வசனத்தின் சத்தியத்திற்குமேல் பாரம்பரியங்களை வற்புறுத்துதல் (மத் 23:17-22; லூக் 11:38-40)



9. வசனத்தைக் கேட்டும் அதின்படிச் செய்யாதிருத்தல் (மத் 7:26)
10. தேவனது காரியங்களில் அதிகமாய்ச் செவிகொடாமல் தனக்காகவே பொருள் சேர்த்துவைத்தல் (லூக் 12:20,21)
11. உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தத்தைச் சந்தேகித்தல் (1 கொரி 15:35,36)
12. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காய் ஆயத்தப்படுவதில் கவலையீனம் (மத் 25:1-13)

***தேவனது கண்ணோட்டத்தில் ஞானத்திற்கும் மதியீனத்திற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ள நீதிமொழிகள் புத்தகம் முழுவதையும் வாசியுங்கள்.***

***கூடுதல் குறிப்புகள்:***

________________________________________

# 17 எதிர்ப்புப் போட்டி

***(அ) போட்டியைத் துவங்கியது லூசிபர்தான்!***

*‘‘அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நான் வானத்துக்கு ஏறுவேன் ... உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று நீ உன் இருதயத்தில் சொன்னாயே!’’* (ஏசா 14:12-14)

***(ஆ) முன்மாதிரியான நல்ல எடுத்துக்காட்டுகள்***

1. தாவீதும் யோனத்தானும்

   *‘‘யோனத்தான் போர்த்துக் கொண்டிருந்த சால்வையைக் கழற்றி அதையும், தன் ஆடையையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையுங்கூடத் தாவீதுக்குக் கொடுத்தான்’’* (1 சாமு 18:1-4)

2. இயேசுவும் யோவான் ஸ்நானனும்

   *‘‘யோவானைப் பார்க்கிலும் இயேசு அதிகமானோரைச் சீடராக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார்’’* (யோ 4:1-3; லூக் 3:15,16)

3. பவுல்

   *‘‘நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்’’* (ரோ 15:21)

***(இ) போட்டியைத் தவிர்ப்பது எங்ஙனம்***

1. பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்டாலொழிய ஒருவனும் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான் என்று அறியுங்கள் (யோ 3:27)
2. உங்களைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதிருங்கள் (ரோ 12)
3. நீங்கள் அழைக்கப்பட்ட நிலையிலே நிலைத்திருங்கள் (1 கொரி 7:20)



4. தேவன் உங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவுப் பரமாணத்தை மிஞ்சாதிருங்கள்; அவர் உங்களுக்கு நியமித்த எல்லையைக் கடக்காதிருங்கள் (2 கொரி 10:13-16)
5. நாம் எல்லாரும் ஒரே தேவனுக்கு ஒரே அறுவடையில் உடன் வேலையாட்களாயிருக்கிறோம் என்பதை நினைவில் வையுங்கள் (1 கொரி 3:5-10)
6. யார் குத்தினாலென்ன? நெல் அரிசியாக வேண்டும்; அவ்வளவு தானே! எப்படியாவது கிறிஸ்து பரசங்கிக்கப்பட்டால் அதுவே உங்களை மகிழ்விக்கட்டும்! (பலி 1:15-18)

***(ஈ) தேவ சேனையின் ஒழுங்கு***

*‘‘அவைகள் பராக்கிரமசாலிகளைப்போல் ஓடும்;*
*யுத்த வீரரைப்போல மதிலேறும்;*
*வரிசைகள் பிசகாமல்,*
*ஒவ்வொன்றும் தன்தன் அணியிலே செல்லும்;*
*ஒன்றை ஒன்று நெருக்காது;*
*ஒவ்வொன்றும் தன்தன் பாதையிலே செல்லும்;*
*கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார்;*
*அவருடைய பாளையம் மகா பெரிது!’’* (யோவேல் 2:7-11)

***கூடுதல் குறிப்புகள்:***

# 18 எதிர்ப்புப் போட்டி

(அ) சோம்பலின் பயங்கரம்

***1. அது தேவனுக்கு முன்பாகப் பொல்லாப்புக்குச் சமானம்!***

*''பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே''* (மத் 25:26)

2. அது தற்கொலை!

*''சோம்பேறியின் ஆசை அவனைக் கொல்லும்''* (நீதி 21:25)

3. அது ஒழுங்கற்ற நடக்கையென அப்போஸ்தலரால் கண்டிக்கப் பட்டது!

*''உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், ஒழுங்கற்றுத் திரிகிறார்கள்''* (2 தெச 3:6-12)

### *(ஆ) சோம்பலின் விளைவுகள்*

1. அது சோதனைக்கு வழி வகுக்கிறது
   எடுத்துக்காட்டு: தாவீது (2 சாமு 11:1-4)
2. அது ஆவிக்குரிய, இம்மைக்குரிய வறுமைக்குக் காரணமாகிறது (நீதி 6:9-11; 18:9; 19:15; 20:4)
3. அது உடைமைகளைப் பாழாக்குகிறது (பிர 10:18)
4. அது அடிமைத்தனத்துக்கு நடத்துகிறது (நீதி 12:24)
5. அது நரகாக்கினைக்குக் கொண்டுபோகிறது (மத் 25:26-40)
6. அது கர்த்தர் வாக்குப்பண்ணிய ஆசீர்வாதங்களை நாம் பெறத் தடுக்கிறது (எபி 6:11,12)
7. அது தேவனுக்காகப் புதிய எல்லைகளை நாம் சுதந்தரிக்கவிடாமற் செய்கிறது (நியா 18:9)

### *(இ) சோம்பலின் சில வெளிப்பாடுகள்*

1. நொண்டிச் சாக்குகள்
   *''வெளியிலே சிங்கம் என்று சோம்பேறி சொல்லுவான்''* (நீதி 22:13)



2. அதிக தூக்கம்
   *''சோம்பல் தூங்கி விழப்பண்ணும்''* (நீதி 19:15; 6:9)
3. நேரம் வீணடிப்பு, காலந்தாழ்த்துதல்
   *''தூங்குகிற நீ ... நாட்கள் ... காலம்''* (எபே 5:14-16)

### *(ஈ) சில ஆன்றோர் கூற்றுகள்*

1. சோம்பேறியின் மனம் பிசாசின் தொழிற்சாலை!
2. சோம்பேறி வீணடிப்பது தருணத்தையல்ல, தன்னையே!
3. காலையில் பந்தி எழும்புபவன் நாள் முழுவதும் விரைவாய் ஓடவேண்டியிருக்கும்!

### *(உ) சோம்பலுக்கு அவிழ்தம்*

*''எறும்பினிடத்தில் போ''* (நீதி 6:6-9)

### *(ஊ) ஒரு வாக்குத்தத்தம்*

*''தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு; அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பரகாசிப்பப்பார்!''* (எபே 5:14)

***கூடுதல் குறிப்புகள்:***

____________________________________________

# 19 துக்கம்

***(அ) துக்கத்துக்குக் காரணங்கள்***

1. தேவனுக்குக் கீழ்ப்படியாமை (ஆதி 3:16,17)
2. துன்மார்க்கம்
   *''துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு''* (சங் 32:10)
3. தேவனற்ற பாவ வாழ்வு
   *''பாவம் செய்கிறவனுக்கு ... தொல்லை''* (பிர 2:26)
4. விக்கிரக ஆராதனை (சங் 16:4)
5. குடிகள், களியாட்டுகள் (நீதி 23:19,30)
6. தேவனைத் தள்ளிய சுயமுயற்சி வாழ்வு
   *''கட்டுதல் ... காத்தல் ... வேலையிலே தரித்திருத்தல் ... வருத்தத்தின் அப்பம்''* (சங் 127:1-3)
7. பொருளாசை, பணத்தின்மீது நம்பக்கை
   *''பண ஆசை ... அநேக வேதனைகள்''* (1 தீமோ 6:10; பிர 5:12)

***(ஆ) துக்கத்தின் விளைவுகள்***

1. ஆவி முறிவடைகிறது (நீதி 15:13)
2. வசனம் நெருக்கப்பட்டு பலனற்றுப்போகிறது (மத் 13:22)
3. இரண்டாம் வருகைக்கான ஆயத்தம் பாதிக்கப்படுகிறது (லூக் 21:34)

***(இ) விடுபெற வழி***

1. பாவத்தை உண்மையாய் ஒப்புக்கொண்டு, முழுமனதாய் அதை அறிக்கையிடல் (சங் 38:17,18)
2. தேவ இரக்கத்தை நம்பச் சாருதல் (சங் 13:2,5,6)
3. தேவ வசனத்தை அணைத்துக்கொள்ளல் (சங் 119:92,143)

***(ஈ) மகிழ்வாழ்வுக்குச் சாதக வழிகள்***



1. தேவ இராஜ்யத்துக்கடுத்த காரியங்களுக்கு அதிமுக்கியத் துவத்தையும், முதலிடத்தையும் கொடுங்கள் (மத் 6:31-33)
2. பரிசுத்த ஆவியினால் எப்பொழுதும் நிறைந்திருங்கள் (அப் 13:52; சங் 36:8; 46:4)
3. எதையும் ஜெபத்தில் தேவனிடம் எடுத்துச் சொல்லுங்கள் (பிலி 4:6; யாக் 5:13; 1 பேது 5:7)
4. துதியோடும், தொழுகையோடும் அவர் பரசன்னத்தில மகிழ்ந்திருங்கள் (யோபு 1:21; சங் 16:11; 30:11,12; ஏசா 61:3)
5. வெற்றி, பலம், பாதுகாப்பு, இவ்வித சாதக வார்த்தைகளே எப்பொழுதும் உங்கள் நாவில் இருக்கட்டும் (சங் 18:2-6; வெளி 2:11)

***(உ) துக்கம் நீக்கும் தேவன்***

*''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாய் இருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப் படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திவத்திலாகிலும் அகப்படு கிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர் களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்''* (2 கொரி 1:3,4)

***கூடுதல் குறிப்புகள்:***

**20**

# அறியாமை

### (அ) அறியாமைக்குக் காரணங்கள்

1. தேவ வசனத்தை அசட்டை செய்தல் (ஏசா 8:20; 1 கொரி 14:36-38)
2. ஆவியானவரின் உதவியை நாடாமல் வெறுமனே அறிவு வளர வசனத்தைப் படித்தல் (1 கொரி 2:9-14; சங் 119:18)
3. வேதத்தை முழுமையாகப் படியாமல் ஒரு சில பரியமான பகுதிகளிலேயே தரித்திருத்தல் (2 தீமோ 3:16,17; மத் 23:23)
4. உலக ஞானத்தைக் குறித்துப் பெருமை பாராட்டல் (1 கொரி 2:4-8)
5. கிறிஸ்துவின் சபையின் கூட்டு வாழ்க்கையை அசட்டை செய்தல் (1 கொரி 12:8,27,28; 14:3,31)
6. சபைக்கு தேவன் தந்துள்ள ஊழியரை அற்பமாய் எண்ணுதல் (எபே 4:11-15)
7. இருதயக் கடினம் (எபே 4:18)

### (ஆ) நாம் அறியாதிருக்கக் கூடாத சில காரியங்கள்

1. இஸ்ரவேலரோடு தேவனது உடன்பாடு (ரோ 11:25-27)
2. நமது படிப்பினைக்கான பழைய ஏற்பாட்டுச் சம்பவங்கள் (1 கொரி 10:1-6; 2 பேது 3:5,6)
3. பிசாசின் தந்திரங்கள் (2 கொரி 2:11)
4. ஆவிக்குரிய வரங்கள் (2 கொரி 12:1)
5. மிஷனரிகள்: மிஷனரி இயக்கங்களின் திட்டங்களும், பிரச்சனைகளும் (ரோ 1:12,13; 2 கொரி 1:8; யோ 4:35)
6. கிறிஸ்துவின் சீக்கிர இரண்டாம் வருகை (2 பேது 3:8,9)
7. மரித்தோர் உயிர்த்தெழுதலின் நம்பக்கை (1 தெச 4:13,14)

### (இ) அறியாமையின் விளைவுகள்

1. விக்கிரகாராதனை (அப் 17:16,23,24)
2. தேவ நீதிக்குக் கீழ்ப்படியாத சுயநீதி (ரோ 10:3)



3. தேவனருளிய வாழ்வுக்கெதிரான பாவ, துன்மார்க்க வாழ்க்கை (எபே 4:18,19; 1 பேது 1:14)
4. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தைப் புறக்கணித்தல் (அப் 3:17; 1 கொரி 2:8)
5. தேவ பிள்ளைகளை உபத்திரவப்படுத்துதல் (அப் 7:57-60; லூக் 23:34)
6. மிஷனரி சுவிசேஷப் பணியைக் கவனியாமை (யோ 4:35; ரோ 10:14,15)

### (ஈ) தேவக் கட்டளை

*''அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்''* (அப் 17:30)

**கூடுதல் குறிப்புகள்:**

# 21 பட்சபாதம்

## *(அ) பட்சபாதம் ஒரு பாவம்*

*''பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப்பரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்''* (யாக் 2:9)

## *(ஆ) பட்சபாதம் கண்டிக்கப்பட்டது*

1. பணக்காரன், ஏழை (யாக் 2:1-5)
2. பலவான், பலவீனன் (எரே 9:23; 1 கொரி 1:26-31)
3. படித்தவன், படியாதவன் (எரே 9:23; 1 கொரி 1:26-31)
4. பெரியவன், சிறியவன் (உபா 1:17)
5. முதலாளி, தொழிலாளி (எபே 6:9; கொலோ 3:11இ)
6. ஆண், பெண்
7. பெரியவர்கள், குழந்தைகள்
8. உயர்குலம், தாழ்குலம் (ரோ 10:12; கொலோ 3:11)
9. வேதத்தின் கட்டளைகளுக்குக் கீழ்படிதலில் (மல் 2:9; மத் 23:23; 2 தீமோ 3:16)
10. நிர்வாகத்திலும், சபை ஒழுங்கிலும் (1 தீமோ 5:19-21)

## *(இ) பட்சபாதத்திற்கு எடுத்துக்காட்டுகளும் அதன் விளைவுகளும்*

1. யாக்கோபின் குடும்பம்

   *''யோசேப்பன் சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது, அவ னோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்''* (ஆதி 37:3,4)

2. எருசலேமிலுள்ள சபை

   *''கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணை யில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்''* (அப் 6:1)



## *(ஈ) பட்சபாதத்தைத் தவிர்ப்பது எங்ஙனம்*

1. ராஜரீகப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுங்கள்!

   *''உன்னிடத்தில் நீ அன்புகூறுகிறது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீகப் பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள். பட்சபாதமுள்ளவர்களாகயிருப்பீர்களானால் ...''* (யாக் 2:8,9)

2. தேவன் ஒருவரே எவரையும் உயர்த்த முடியுமென அறியுங்கள்!

   செபதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரருக்கு இயேசுவின் வலது இடது பக்கத்தைக் கேட்டபொழுது அவர் கொடுத் பதில் (மத் 20:20-23)

3. பரத்திலிருந்து வரும் ஞானத்தைத் தேடுங்கள்!

   *''பரத்திலிருந்து வருகிற ஞானமோ... பட்சபாதமில்லாததாய் இருக்கிறது''* (யாக் 3:17; 1:5)

4. தேவனது குணாதிசயம்

   *''தேவனாகிய கர்த்தரிடத்தில் பட்சபாதம் இல்லை''* (2 நாளா 19:7; அப் 10:34; 1 பேது 1:17)

***கூடுதல் குறிப்புகள்:***

# 22 தள்ளிப்போடுதல்

### *(அ) ஏன் தள்ளிப்போடுதல் கூடாது?*

1. எதிர்காலம் நிச்சயமற்றது(நீதி 27:1; பிர 3:22; 6:12; 8:7; 10:14)
2. வாழ்நாள் குறுகியது (யாக் 4:14; யோபு 7:6; 1 நாளா 29:15)
3. கிறிஸ்துவின் வருகை அதிசமீபம் (எபி 10:37; மத் 24:48-51)
4. உலகநிலை முன்னேறப் போவதில்லை
   (பிர 9:1; ஆமோஸ் 6:3; யோ 9:4)

### *(ஆ) எவைகளில் தள்ளிப்போடுதலைத் தவிர்க்கவேண்டும்?*

1. படைத்தவரைத் தேடுதல் (பிர 12:1-7; சங் 32:6; 69:13)
2. இரட்சிக்கப்படுதல் (2 கொரி 6:2)
   அத்தேனே நகரத்தார் (அப் 17:32)
   பெலிக்ஸ் (அப் 24:25)
3. ஞானஸ்நானம் (அப் 22:16; 16:33)
4. பொல்லாத உலக வழியிலிருந்து பரிதல் (ஆதி 19:15,16)
5. தேவனுக்குப் பொருத்தனைகளை நிறைவேற்றுதல் (பிர 5:4)
6. காணிக்கை செலுத்துதல் (யாத் 22:29)
7. பரிசுத்தவான்களின் குறைவில் உதவுதல் (2 கொரி 8:10,11)
8. தரித்திரருக்கு உதவுதல் (நீதி 3:27,28; யாக் 4:13-17)
9. கூலியாளுக்குக் கூலி கொடுத்துவிடுதல் (லேவி 19:13)
10. நற்செய்தி அறிவிப்பு, ஆத்தும அறுவடை
    (2 இரா 7:9; பிர 11:12; யோ 4:35,36)
11. ஊழிய அழைப்புக்குக் கீழ்ப்படிதல் (மத் 8:21,22)
12. கர்த்தரை மகிமைப்படுத்தும் செயல்கள் (எப 13:16)

### *(இ) புதிய ஏற்பாட்டில் ஒரு முக்கிய பகுதி*

எபிரேயர் 3:7-19



இன்று கடினப்படுத்தாதிருங்கள்! (வச 7,8)
இன்று புத்தி சொல்லுங்கள்! (வச 13)
இன்று விசுவாசியுக்கள்! (வச 15,19)

### *(ஈ) எச்சரிப்புகள்*

1. ஆவியானவர் போராடுவதில் நிறுத்தம்
   *''என் ஆவி என்றைக்கும் மனிதனோடு போராடுவதில்லை''* (ஆதி 6:3)
2. சகாயமின்றிச் சடுதியில் நாசம்
   *''அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப் படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்''* (நீதி 29:1)
3. தேவ கிருபையை வீணடித்தல்
   *''தேவனுடைய கிருபையை நீங்கள்விருதாவாய்ப் பெறாதபடிக்கு ... இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்''* ( 2கொரி 6:1,2)

### கூடுதல் குறிப்புகள்:

________________________________________

# 23 தற்பரிசோதனை

### (அ) ஒப்புரவாகுங்கள்!

1. கோபப்படுகிறேனா?
2. பறரை இழிவாய்ப் பேசுகிறேனா?
3. யாரையாவது சாதுரியமற்றவன் என்று எண்ணி அலட்சியம் பண்ணுகிறேனா?
4. பிறரோடு அன்பற்ற வார்த்தைகளால் கடினமாய்ப் பேசுகிறேனா?
5. என்னையே அறிவாளி என்றெண்ணி யாரையாவது முட்டா என்று சொல்வதுண்டா? (மத் 5:22)
6. யாரையாவது புண்படுத்தியதுண்டா?
7. புறங்கூறுகிறேனா?
8. யாரையாவது அவதூறாய்ப் பேசுகிறேனா? (எபே 4:31)
9. யாருடைய பொருளையாவது திருடியிருக்கிறேனா?
10. நான் வேலை செய்யும் இடத்திலிருந்து எனக்குரியதல்லாததை எடுத்துக்கொண்டதுண்டா?

### (ஆ) எதிராளிகளை நேசியுங்கள் (மத் 5:44)

1. எல்லோரையும் மனப்பூர்வமாக மன்னித்திருக்கிறேனா? அல்லது யார் மீதாவது பகைமையோடிருக்கிறேனா? (மத் 6:14,15)
2. என்னைச் சபக்கிறவர்களை ஆசீர்வதிக்கிறேனா அல்லது சபிக்கிறேனா?
3. என்னைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்கிறேனா அல்லது அவர்களை விலக்கிவிடுகிறேனா?
4. எனது கருத்துக்களோடு ஒத்துப்போகதவர்களோடும் அன்பாயிருக் கிறேனா? (மத் 5:46,47)
5. என்மீது தீங்காய்ப் பழிசுமத்துகிறவர்களுக்காக ஜெபிக்கிறேனா?
6. என்னைத் துன்புறுத்துவோருக்காக எவ்வித மனப்பான்மையுடன் ஜெபிக்கிறேன்? (மத் 5:44)



7. பழிவாங்கும் எண்ணம் எனக்குண்டா?
8. தீமையோடு எதிர்த்து நிற்கிறேனா? (மத் 5:38,39)
9. எனது எதிரி துன்புறும்போது இரகசியமாய் மகிழுகிறேனா?
10. சண்டைக்காரனான எனது அயலகத்தான் தோற்றுப்போகும்போது அவனிடம் எப்படி நடந்துகொள்ளுகிறேன்?
11. என்னைவிட அதிக மதிப்பெண் பெறும் உடன் மாணவன்மீதோ, வேலையுயர்வு பெறும் உடன் ஊழியன் மீதோ பொறாமைப் படுகிறேனா? (நீதி 14:30)

### (இ) தாழ்மையாயிருங்கள்! (மத் 5:3)

1. பின்பற்றுகிறவனாக அல்ல, எப்பொழுதுமே தலைவனாகவே இருக்க விரும்புகிறேனா?
2. பிறர்க்குத் தொண்டு செய்யாமல் பிறரே எப்பொழுதும் எனக்குத் தொண்டு செய்ய எதிர்பார்க்கிறேனா?
3. நான் முக்கியமானவன் எனக் கருதப்பட விரும்புகிறேனா? (லூக் 22:24-27)
4. பிறரைவிட நான் உயர்ந்தவன் என்று எண்ணுகிறேனா? (பிலி 2:3)
5. நான் இயேசுவைப்போல் தாழ்மையுள்ளவனா அல்லது பெருமைக் காரனா?
6. நான் வைக்கப்பட்டிருக்கும் நிலையை எனது சாதனை என்றெண்ணுகிறேனா?
7. நான் செய்பவற்றிற்குப் புகழ் தேடுகிறேனா? (பிலி 2:5-8)
8. பிறரை மதிக்கிறேனா? (ரோ 12:10)
9. கல்விப் பெருமை, செல்வச் செருக்கு, இனவெறி, அழகின் கர்வம், சபைப் பரிவுப் பெருமிதம் போன்றவை என்னிடமுண்டா?
10. எந்த வேலையையாவது எனது தகுதிக்குக் குறைவானதென்று செய்ய மறுக்கிறேனா? (யாக் 4:6)

### (ஈ) தீர்ப்புச் செய்யாதிருங்கள் (மத் 7:1)

1. பிறரைக் குற்றவாளிகளென்று தீர்த்துக்கட்டுகிறேனா?
2. அன்பற்ற முறையில் குறைகூறுகிறேனா?

3. குற்றங்கண்டுபிடிக்கிறவனாகவே இருக்கிறேனா?

4. நான் பிறரைவிட நல்லவன் என்றே எண்ணிக்கொண்டிருக்கிறேனா? (மத் 7:1-4)

5. பிரசங்கிப்பதை என் வாழ்வில் கடைப்படிக்கிறேனா?

6. எனக்குப் பறர் செய்ய நான் விரும்புவதை அவர்களுக்குச் செய்கிறேனா?

7. நான் ஒரு மாய்மாலக்காரனா? (மத் 7:5,12; ரோ 2:1-5)

8. விசுவாசத்தில் பலங்குன்றியவர்களைப் புரிந்துகொண்டு அவர்களைத் தாங்குகிறேனா? (ரோ 14:1; 15:1)

### *(உ) உண்மை பேசுங்கள்! (மத் 5:37)*

1. பொய் பேசுகிறேனா?

2. எதையும் மிகைப்படுத்துகிறேனா?

3. நடந்ததொன்றைப் பறரை மகிழ்விப்பதற்காகத் திரித்துக் கூறுகிறேனா? (மத் 5:37)

4. ஜெபம் உள்ளத்திலிருந்து வராது உதட்டளவில் இருக்கிறதா?

5. பிறரை மன்னியாமல் இருந்துகொண்டு கர்த்தருடைய ஜெபத்தைப் பொய்யாய்ச் சொல்லுகிறேனா? (மத் 6:12)

6. ‘‘அல்லேலூயா’’ அல்லது ‘‘கர்த்தருக்கு ஸ்தோத்திரம்’’ என்று சொல்லும்போது அதின் பொருளை உணருகிறேனா?

### *(ஊ) வாலிப இச்சைகளுக்கு விலகியோடுங்கள்! (2 தீமோ 2:22)*

1. எதிர்பாலினரை இச்சையோடு பார்க்கிறேனா? (மத் 5:28)

2. பறனது மனைவியை இச்சிக்கிறேனா? (யாத் 20:17)

3. அசுத்தமான பழக்கங்கள் என்னிடம் உண்டா?

4. பாலுணர்வுகளை முறைகேடாய்ப் பயன்படுத்துகிறேனா? (1 கொரி 6:9)

5. கண்ணைப்போல் அருமையாகவும், கையைப்போல் அவசியமானதாகவும் தெரிந்தாலும் பரிசுத்தமற்ற உறவுகளை முறித்துக்கொள்ள நான் ஆயத்தமா?

6. இச்சைகளைத் தூண்டுபவற்றைப் பார்க்க நாடுகிறேனா?



7. ஒழுக்கக் கேடாக உடுத்துகிறேனா?

*‘‘தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்!’’*
(சங் 139:23,24)

கிறிஸ்தவ வாழ்வில்
நிறைவாய் வளர உணவளிக்கும்
ஒரு தினசரித் தியான நூல்...



*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும்...
அனைத்து வயதினரும்...
அனைத்துத் துறையினரும்...
விரும்பி வாசிக்கும்
ஒரு புதிய படைப்பு!**

432 பக்கங்கள்; விலை ரூ. 150/- அனுப்பச் செலவு ரூ. 30/-
10 பிரதிகளுக்குமேல் 30% தள்ளுபடி

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,
மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 150/- அனுப்பச் செலவு ரூ. 30/-

*கிடைக்குமிடம்:*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600*
*<stanleyonbible@hotmail.com>*



# ''பைபிள் புதையல்கள்''

by **R. ஸ்டான்லி**



ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 50/-
*ஆங்கிலத்திலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழ்.*

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 30/-

■

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

*இவை ஆசிரியரிடம் கிடைக்கும்.*

## ஆசிரியரது பிற நூல்கள்

- ❒ அறிவூட்டும் அகவுணர்வுகள்
- ❒ ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?
- ❒ ஆனந்த அறுவடை
- ❒ இரட்சிக்கப்படுவது எப்படி?
- ❒ இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?
- ❒ உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்
- ❒ ஊழியரும் மக்களும்
- ❒ எதிர்நீச்சல் வாலிபர்
- ❒ எழுப்புதல் வரும்போது ...
- ❒ ஐந்தப்பம் இரு மீன்
- ❒ கண் திறக்கும் கட்டுரைகள்
- ❒ காட்டுத் தேன்
- ❒ கீழ்ப்படிதலே மேல்படி!
- ❒ சமநிலைக் கிறிஸ்தவன்
- ❒ திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)
- ❒ திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)
- ❒ நெஞ்சில் நெருப்பு
- ❒ பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!
- ❒ பொற்பழங்கள்
- ❒ பைபிள் பதில்கள்
- ❒ மாணவ மணிகளுக்கு...
- ❒ வல்லமை தேவனுடையது!
- ❒ விசுவாச வாழ்வு

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச்செய்திகள் அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*



**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

## CONTENTS

- ❒ ***General Messages***
  Enlightening Articles for Christian Growth
- ❒ ***Sermon Outlines***
  Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching
- ❒ ***Bible Studies***
  Studies on specific themes and select books of the Bible
- ❒ ***Doctrinal Essays***
  Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible
- ❒ ***Youth Matters***
  Practical Guidelines to Young Men and Young Women for Successful Living
- ❒ ***Leaders Column***
  Biblical Insights and Practical Lessons on Christian Leadership
- ❒ ***Missionary Challenge***
  Calling Christians to obey the Great Commission of Christ
- ❒ ***My Answers***
  Answers to Questions frequently asked but rarely answered
- ❒ ***Quotable Quotes***
  Stanley's analytical Statements about Christian Life and Ministry
- ❒ ***Video Talks***
  Stanley's Bible Sermons in Video & Audio format, freely downloadable

Register your e-mail id in this website
to receive updates instantly.

# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத, ஒரு திருப்பணி***

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

ஏறத்தாழ 350 முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத்,
கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
*தொலைபேசி: 00 91 416 2242943, 2248943*
*<hq@bymonline.org>  www.bymonline.org*